பத்திரிக்கை செய்தி

கூட்டுப்பட்டாவில் பெயர் மாறுதல் செய்து தர ரூ.2,500/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது

புகார்தாரர் திரு.கார்த்திகேயன், அய்யம்பாளையம் கிராமம், திண்டுக்கல் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய நிலத்திற்கு கூட்டுப்பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய அய்யம்பாளையம் கிராம நிர்வாக அலுவலகம், ஆத்துார் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.ரமேஷ், கிராம நிர்வாக அலுவலர், அய்யம்பாளையம், ஆத்துார் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.3,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். பின் லஞ்ச பணத்தை ரூ.2,500/- ஆக குறைத்துகொண்டு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திண்டுக்கல் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 07.08.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ரமேஷ், கிராம நிர்வாக அலுவலர், லஞ்ச பணம் ரூ.2,500/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.